# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 244/மா/2025**

**நாள்: 07.05.2026**

S. அன்பழகன்
துறையூர்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம் --- முறையீட்டு மனுதாரர்

(1) ஆணையர்,
காஞ்சிபுரம் மாநகராட்சி
(2) உரிமையாளர்
ஈகுள் இன்ஸ்டே, காஞ்சிபுரம் --- எதிர்மனுதாரர்கள்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் (அஞ்சல் & வட்டம்), முசிறி மெயின் ரோடு, அசோக் நகர், கதவு எண் 155 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. அன்பழகன் என்பவரின் 10.07.2025 நாளிட்ட மனு இம்முறை மன்ற நடுவத்தில் 11.07.2025 அன்று பெறப்பட்டு 244/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் (அஞ்சல் & வட்டம்), முசிறி மெயின் ரோடு, அசோக் நகர், கதவு எண் 155 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. அன்பழகன் என்பவர் தனது 10.07.2025 நாளிட்ட முறையீட்டு மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"தமிழகத்தில் பழைமையான கோவில்கள், கோபுரங்கள் உள்ள பகுதிகளில் 1 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் 9 மீட்டர் உயரத்திற்கு மேல் கட்டிடங்கள் கட்டக் கூடாது என்கிற விதியை மீறி காஞ்சிபுரத்தில் 140/1 காமாட்சி அம்மன் சன்னதி தெருவில் உலகளந்தார் பெருமாள் கோவில் காம்பவுண்ட் சுவர் ஒட்டி காமாட்சி அம்மன் கோவிலுக்கு 200 மீட்டர் தூரத்திலும், முக்தேஸ்வரர் கோவிலுக்கு 200 மீட்டர் தூரத்திலும், வைகுண்ட பெருமாள் கோவிலுக்கு $^1/_2$ கிலோ மீட்டர் தூரத்திலும் சுமார் 20 மீட்டர் உயரத்தில் 5 மாடி கட்டிடம் அதுவும் ஈகிள் இன்ஸ்டே என்கிற லாட்ஜ் அதுவும் பார்க்கிங்கென்று 1 அங்குலம் கூட இடம் விடாமல் சட்ட விரோதமாக கட்டி உள்ளதை தகுந்த ஆதாரங்களுடன் விளக்கி கட்டிடத்தை இட நேராய்வு செய்து விதிமீறிய கட்டிடத்தை இடித்து அகற்றுமாறு நான் கடந்த

24.04.2025இல் காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையருக்கு புகார் அனுப்பி அதன் நகலை நகராட்சி நிர்வாக இயக்குநர், மண்டல இயக்குனருக்கும் அனுப்பினேன். (நான் மாநகராட்சி ஆணையருக்கு அனுப்பிய புகாரின் நகல் தங்களின் மேலான பார்வைக்கு இத்துடன் இணைக்கப்படுகிறது.)

நான் அனுப்பிய புகாரை மாநகராட்சி ஆணையர் 28.04.2025இல் பெற்றுக் கொண்டதாக ஒப்புகை சான்று வந்துள்ளது. அதுபோல நிர்வாக இயக்குனர் மண்டல இயக்குனர் இருவரும் பெற்றுக் கொண்டதாக ஒப்புகை சான்று வந்துள்ளது.

நான் ஆணையருக்கு அனுப்பிய புகாரிலேயே மிகமிக தெளிவாக தமிழகத்தில் பழைமையான கோவில்கள், கோபுரங்கள் உள்ள பகுதிகளில் 1 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் 9 மீட்டர் உயரத்திற்கு மேல் கட்டிடங்கள் கட்டக்கூடாது என்று 30.01.1997இல் அரசாணை வெளியிடப்பட்டது தெரிந்தும், அரசாணையை மீறி அதுவும் பல்லவர் காலத்து கோவிலான உலகளந்தார் பெருமாள் கோவில் காம்பவுண்ட் சுவரை ஒட்டியும், காமாட்சி அம்மன் கோவிலிலிருந்து 200 மீட்டர் தூரத்திலும், முக்தேஸ்வரர் கோவிலிலிருந்து 200 மீட்டர் தூரத்திலும், வைகுண்ட பெருமாள் கோவிலிலிருந்து $^1/_2$ கிலோ மீட்டர் தூரத்திலும், 20 மீட்டர் உயரத்தில் ஈகிள் இன்ஸ்டே லாட்ஜ் சட்ட விரோதமாக கட்டி உள்ளதை குறிப்பிட்டிருந்தேன்.

மேலும் நான் புகாரிலேயே புதிதாக கட்டிடம் கட்டும் இடங்களை எவ்வாறு ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நகராட்சி நிர்வாக இயக்குநர் அனுப்பிய சுற்றறிக்கையை ஒழுங்காக கடைபிடிக்காத காரணத்தால் தான் விதிமீறி ஈகிள் இன்ஸ்டே லாட்ஜ் உருவாகி இருப்பதற்கு மாநகராட்சியின் அலட்சிய போக்கே காரணம் என்று குறிப்பிட்டிருந்தேன்.

மேலும் அரசாணை எண் 139 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 10.05.2002 காஞ்சிபுரம் முழுமைத் திட்டத்தின்படி PROTECTED MONUMENTS UNDER THE ANCIENT MONUMENTS AND ARCHAEOLOGICAL SITES AND REMAINS ACT, 1958இல் அறிவிப்பு செய்யப்பட்டபடி உலகளந்தார் பெருமாள், காமாட்சி அம்மன், முக்தேஸ்வரர், வைகுண்ட பெருமாள் கோவில்களுக்கு 1 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் கட்டிட உயர வரம்பு 9 மீட்டர் ஆகும். ஆனால் உலகளந்த பெருமாள் கோவில் காம்பவுண்ட் சுவர் ஒட்டியும், காமாட்சி அம்மன் கோவில் அருகில் 200 மீட்டர் தூரத்திலும், முக்தேஸ்வரர் கோவிலிலிருந்து 200 மீட்டர் தூரத்திலும், வைகுண்ட பெருமாள் கோவிலிலிருந்து $^1/_2$ கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் 20 மீட்டர் உயரத்தில் விதியை மீறி ஈகிள் இன்ஸ்டே லாட்ஜ் கட்டி இருப்பது மாநகராட்சி அதிகாரிகள் லஞ்சம் வாங்கி கொண்டு தான் கண்டு கொள்ளவில்லையோ என்று என் புகாரிலேயே தெரிவித்திருந்தேன்.

மேலும் பல்வேறு விதிமீறல் கட்டிடங்கள் தொடர்பான வழக்குகளில் உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுகளை சுட்டிக் காட்டியதோடு, குறிப்பாக திருச்சி அடுக்குமாடி குடியிருப்பு வழக்கில் விதிமீறி கட்டிடம் கட்டும்வரை வேடிக்கை பார்த்த திருச்சி மாநகராட்சி ஆணையர் உட்பட அனைத்து அரசு அதிகாரிகள் மீதும் துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க மாண்புமிகு உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையருக்கும் பொருந்தும் என்பதை நான் புகாரிலேயே நினைவூட்டியிருந்தேன்.

மேலும் விதிமீறல் கட்டிடம் தொடர்பான அனைத்து வழக்குகளிலும் விதிமீறி கட்டிடம் கட்டப்பட்டதை உடனடியாக இடிப்பது தான் சட்டம் என்றும், குறைபாடுகளை சரிசெய்து கொள்ளலாம் என்று இருக்க கூடாது என்றும் கூறியதோடு, விதி மீறிய கட்டிடத்தை இடிக்க வேண்டிய பொறுப்பு மாநகராட்சியை சாரும் என்று மாண்புமிகு

உயர்நீதிமன்றம் மிக தெளிவாக உத்தரவு பிறப்பித்துள்ளதை புகாரிலேயே குறிப்பிட்டிருந்தேன்.

மேலும் சமீபத்தில் மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதி அரசர் வேல்முருகன் ADGP கைது வழக்கில் சட்டத்தை மீறினால் என்ன நடக்கும் என்பதை அனைத்து பொது ஊழியர்களும் அறிய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளதை அறிந்தும் ஆணையருக்கு கடுகளவுகூட உயர்நீதிமன்றத்திடம் பயமும், மரியாதையும் இல்லை என்பதை நிரூபிக்கும் வகையில் தான் இதுவரை என் புகார் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்பது நன்கு விளங்குகின்றது.

இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் அனுமதி இல்லாமல் செயல்படும் கட்டுமானங்கள் மீது மாண்புமிகு உச்சநீதிமன்றம் 12199–12200/2025 நாள் 30.04.2025 இல் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் Roc No.3555/2025/TP3 நாள் 15.5.2025 கடிதம் மூலம் உச்சநீதிமன்ற உத்தரவை இணைத்து அனைத்து மாநகராட்சி ஆணையர்களுக்கும் கடிதம் அனுப்பியும் மாண்புமிகு உச்சநீதிமன்றத்தையே கிள்ளு கீரையாகவும், செல்லாக் காசாகவும் கருதி கொண்டு இதுவரை விதிமுறைகளை முற்றிலும் மீறி செயல்படும் ஈகிள் இன்ஸ்டே லாட்ஜ் கட்டிடத்தின் மீது மாநகராட்சி ஆணையர் நடவடிக்கை எடுக்காதது மிகவும் அதிர்ச்சியும், ஆச்சரியமும் ஏற்பட வைக்கிறது.

எனவே சத்தியத்தின் வழியில் நேர்மையாக கடமை புரியும் மாண்புமிகு மதிப்பு மிக்க மரியாதைக்குரிய தாங்கள் மாண்பும்கு உச்சநீதிமன்ற உத்தரவுப்படி விதிமுறைகளை முற்றிலும் மீறி மாநகராட்சி அனுமதியின்றி செயல்படும் ஈகிள் இன்ஸ்டே லாட்ஜ் கட்டிடத்தை இடித்து அகற்ற நடவடிக்கை எடுப்பதோடு, விதிமீறிய ஈகிள் இன்ஸ்டே லாட்ஜ் கட்டிடத்திற்கு உடந்தையாக இருந்த மாநகராட்சி ஆணையர் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

2. மேற்கண்ட மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 16.07.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையாளர் தனது கடிதம் ந.க. எண் 5266/2025/எப்1, நாள் 30.07.2025 மற்றும் 18.03.2026–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கைகள் சமர்ப்பித்துள்ளார்:–

<u>30.07.2025 நாளிட்ட அறிக்கை</u>

''காஞ்சிபுரம் நகரம் சர்வே வார்டு எண்.4, பிளாக் எண்.10, நகரளவு எண்.720, பழைய கதவு எண்.140/1, காமாட்சியம்மன் சன்னதி தெருவில் காஞ்சிபுரம் மாநகராட்சி அலுவலக கட்டிட அனுமதி எண் 008/BL/2023/00136, நாள் 18.04.2023–ன்படி வணிக கட்டிடம் கட்ட ஸ்டில்ட் தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது கட்டிட உரிமையாளர் அனுமதிக்கு மாறுதலாக, கூடுதலாக இரண்டு தளங்கள் மற்றும் கூடுதல் பரப்பளவில் தங்கும் விடுதி கட்டிடம் கட்டியுள்ளார்.

மேற்கண்ட கட்டிடத்தின் மீது மேல் நடவடிக்கை தொடர தொடர்ச்சியாக நகரமைப்பு பிரிவில் அலுவலர் பணியிடம் காலியாக இருந்த நிலையில், தொடர் நடவடிக்கை எடுக்க இயலவில்லை. தற்போது தொடர் நடவடிக்கையாக கட்டிட உரிமையாளர் அனுமதிக்கப்பட்ட கட்டிடத்திற்கு மாறுதலாகவும் / கூடுதலாகவும் கட்டிடம் கட்டியிருப்பதால், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம் 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 135/1–ன் கீழ் 12.06.2025–ல் அறிவிப்பு வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும் மேற்படி கட்டிடத்திற்கு இம்மாநகராட்சி மூலம் வழங்கப்பட்ட கட்டிட வரைபட அனுமதி நகல், வரைபடம் மற்றும் அறிவிப்பு நகல்கள் ஆகையவை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.''

**18.03.2026 நாளிட்ட அறிக்கை**

''காஞ்சிபுரம் நகரம் சர்வே வார்டு எண்.4, பிளாக் எண்.10, நகரளவு எண்.720, கதவு எண்.140/1, காமாட்சியம்மன் சன்னதி தெருவில் காஞ்சிபுரம் மாநகராட்சி அலுவலக கட்டிட அனுமதி எண் 008/BL/2023/00136, நாள் 18.04.2023–ன்படி தரை, முதல் மற்றும் இரண்டாம் தளம் வணிக கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கட்டிட உரிமையாளர் அனுமதிக்கு மாறுதலாக புராதன நகரத்திற்கான உயர கட்டுப்பாட்டு விதிகளுக்கு மீறி கூடுதலான உயரத்தில் மூன்றாம் தளம் மற்றும் நான்காம் தளம் கட்டியுள்ளார்.

தற்போது மேற்கண்ட கட்டிட உரிமையாளருக்கு அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட கட்டிடத்திற்கு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம் 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 135/1–ன் கீழ் 12.06.2025–ல் அன்று அறிவிப்பு வழங்கப்பட்டது. அறிவிப்பில் கட்டிட பணியை நிறுத்தி விடுவதோடு அனுமதி வழங்கப்பட்ட வரைப்படத்திற்கு மாறுதலாக கட்டப்பட்ட கட்டிடத்தை பதினைந்து (15) தினங்களுக்குள் மேற்படி சட்ட பிரிவு 135(2)–ன் கீழ் கட்டிட அனுமதி கோரி திருத்திய வரைப்படம் இணைய தளம் மூலம் விண்ணப்பிக்க தெரிவிக்கப்பட்டது. தவறும்பட்சத்தில் 135 (6)–ன்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. மேலும் 15 தினங்களுக்கு மேல் ஆயினும் இணையதளம் மூலம் விண்ணப்பிக்காத காரணத்தால் 08.10.2025 அன்று இறுதி அறிவிப்பு சட்ட பிரிவு 135 (6)–ன்கீழ் வழங்கப்பட்டுள்ளது. இறுதி அறிவிப்பில் 15 தினங்களுக்குள் இதுவரையில் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்த தெரிவிக்கப்பட்டது. தவறும்பட்சத்தில் சட்டப்பிரிவு 180–ன்கீழ் நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு தாக்கல் செய்வதாக தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் இதுநாள்வரை இணையதளம் மூலம் விண்ணப்பிக்கவோ கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தவில்லை. எனவே காஞ்சிபுரம் மாநகராட்சி அலுவலக குற்றப்பத்திரிக்கை எண் P.R.No.5/Zone1/2026, நாள் 25.02.2026–ன்படி கட்டிட உரிமையாளர் மீது காஞ்சிபுரம் முதன்மை உரிமையியல் நீதிமன்றத்தில் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998–ல் பிரிவு 135(1) (2) (6) R/W 180–ன்கீழ் குற்றச்சாட்டு பதிவு செய்து குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ள குற்றப்பத்திரிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடத்திற்கு இம்மாநகராட்சி மூலம் வழங்கப்பட்ட கட்டிட வரைபட அனுமதி நகல், வரைபடம், அறிவிப்பு நகல்கள் மற்றும் குற்றப்பத்திரிக்கை நகல் ஆகியவை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.''

4. இம் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 24.03.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 11.02.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. இந்நிலையில், மனுதாரர் 24.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் தன்னுடைய எழுத்துபூர்வமான வாக்குமூலத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

''தமிழகத்தில் பழைமையான கோவில்கள், கோபுரங்கள் உள்ள பகுதிகளில் 1 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் 9 மீட்டர் உயரத்திற்கு மேல் கட்டிடங்கள் கட்டக் கூடாது என்கிற விதியை மீறி காஞ்சிபுரத்தில் 140/1 காமாட்சி அம்மன் சன்னதி தெருவில் உலகளந்தார் பெருமாள் கோவில் காம்பவுண்ட் சுவர் ஒட்டி காமாட்சி அம்மன் கோவிலுக்கு 200 மீ. தூரத்திற்கு முக்தேஸ்வர் கோவிலுக்கு 200 மீ. தூரத்திலும், வைகுண்ட பெருமாள்

கோவிலுக்கு $^1/_2$ கிலோ மீட்டர் தூரத்திலும் சுமார் 20 மீட்டர் உயரத்தில் 5 மாடி கட்டிடம் அதுவும் ஈகிள் இன்ஸ்டே என்கிற லாட்ஜ் அதுவும் பார்க்கிங், செட்பேக் 1 அங்குலம் கூட இடம் விடாமல் விதிகளை மீறி கட்டியுள்ளதோடு, மேலும் அரசாணை எண் 139 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள் 10.05.2002 காஞ்சிபுரம் முழுமைத் திட்டத்தின்படி PROTECTED MONUMENTS UNDER THE ANCIENT MONUMENTS AND ARCHAEOLOGICAL SITES AND REMAINS ACT, 1958இல் அறிவிப்பு செய்யப்பட்டபடி உலகளந்தார் பெருமாள், காமாட்சி அம்மன், முக்தேஸ்வரர், வைகுண்ட பெருமாள் கோவில்களுக்கு 1 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் கட்டிட உயர வரம்பு 9 மீட்டர் உயரம் என்கிற விதியை மீறி ஈகிள் இன்ஸ்டே லாட்ஜ் கட்டி இருப்பது மாநகராட்சி அதிகாரிகள் லஞ்சம் வாங்கி கொண்டு தான் கண்டு கொள்ளவில்லை என்பது தெரிகிறது.

எனவே, விதிமீறிய ஈகிள் இன்ஸ்டே லாட்ஜ் கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்காத காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் மீது நடவடிக்கை எடுத்து விதிமீறி கட்டப்பட்டுள்ள ஈகிள் இன்ஸ்டே லாட்ஜ் கட்டிடத்தை உச்சநீதிமன்ற உத்தரவு எண் 12199–12200 நாள் 30.04.2025 உத்தரவின் கீழ் இடித்து அகற்றுமாறு பொது நலன் கருதி கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கனவே காஞ்சிபுரத்தில் விதிமீறிய ஸ்ரீராம் ரெசிடென்ஸி கட்டிடத்தின் மீது மதிப்புமிக்க தங்களால் நடவடிக்கை எடுக்க உத்தரவிட்ட 83/மா/2025இன் வழக்கின் நிர்வாகி தான் ஆணையரை சரிகட்டி விட்டதாகவும், நான் உயர்நீதிமன்றத்தில் கட்டிடத்தை இடிக்க வழக்கு போடக்கூடாது என்றும், மீறி வழக்கு போட்டால் கொலை செய்து விடுவதாக மிரட்டியது தொடர்பாக D.I.G. SP ஆகியோரிடம் புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுக்காத காரணத்தால் மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் மாண்புமிகு நீதி பேரரசர் மணிக்குமார் அவர்களின் நேரடி கவனத்திற்கு என் பிரச்சனையை கொண்டு சென்றுள்ளதால் என் புகார் மீது மின்னல் வேகத்தில் 10941/22/36/2025 என எண்ணிட்டு வழக்கு பதிவு செய்து விசாரணை வளையத்திற்குள் D.I.G., SP மற்றும் சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளையும் இணைத்து வழக்கு விசாரணை நிலுவையில் உள்ளது.

ஏற்கனவே காஞ்சிபுரத்தில் விதிமீறிய காஞ்சி காமாட்சி ரெசிடென்சி மீது மரியாதைக்குரிய தாங்கள் நடவடிக்கை எடுக்க உத்தரவிட்ட 165/மா/2025–ன் உத்தரவை காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் அமல்படுத்தாமல் அரசியல் சட்டம் எனக்கு வழங்கிய அடிப்படை உரிமையையும் எனது பொது நல நோக்கத்தையும் சீர்குலைத்து நான் வாழ்நாள் முழுவதும் இனி பொது நலனில் ஒரு போதும் ஈடுபடக்கூடாது என்று தடுக்கும் நோக்கில் செயல்படும் காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் மீது நடவடிக்கை எடுத்து நான் பொது நலனில் தொடர்ந்து ஈடுபட எனக்கு ஊக்கமும் ஆக்கமும் அளிக்கும் வகையில் இழப்பீடு பெற்றுத் தருமாறு மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் மாண்புமிகு நீதி பேரரசர் மணிக்குமார் அவர்களிடம் நேரடியாக புகார் அளித்த காரணத்தால் என் புகார் டைரி எண் 1356/CR/2026 என பதியப்பட்டு கூடிய விரைவில் வழக்கு பதிவு செய்யப்படும் என்பதை தங்களுக்கு தெரிவித்து கொள்கிறேன்.

எனவே இத்தகைய சூழ்நிலையில் என் புகார் மீது காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் நடவடிக்கை எடுப்பார் என்பது நீர் மேல் எழுதும் எழுத்திற்கு சமம் என்று நான் கருதுவதால் மதிப்புமிக்க தாங்கள் காஞ்சிபுரத்தில் விதிமீறி கட்டி உள்ள ஈகிள் இன்ஸ்டே லாட்ஜ் கட்டிடத்தை இட நேராய்வு செய்து சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

6. மேலும், மனுதாரர் 24.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

“காஞ்சிபுரத்தில், 140/1 காமாட்சி அம்மன் சன்னதி தெருவில் உள்ள உலகளந்தார் பெருமாள் கோவில் காம்பவுன்ட் சுவர் ஒட்டி, காமாட்சி அம்மன் கோவில் 200 மீட்டர் தூரத்தில், முக்தேஸ்வரர் கோவில் 200 மீட்டர் தூரத்தில், வைகுண்ட பெருமாள் கோவில் 1/2 கிலோ மீட்டர் தூரத்தில், சுமார் 20 மீட்டர் உயரத்தில் 5 மாடி கட்டிடம் Eagle Inn Stay தங்கும் விடுதி (Lodge) Parking வசதி இல்லாமல், கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மேலும், தமிழகத்தில் பழமையான கோவில்கள் கோபுரங்கள் உள்ள பகுதிகளில் 1 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் 9 மீட்டர் உயரத்திற்கு மேல் கட்டிடங்கள் கட்டக் கூடாது என தமிழ்நாடு அரசு 30.01.1997 நாளிட்ட அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக இயக்குநர் அனுப்பிய சுற்றறிக்கையில் புதிதாக கட்டிடம் கட்டும் இடங்கள் எவ்வாறு ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தலின்படி காஞ்சிபுரம் மாநகராட்சி அலுவலர்கள் பின்பற்றி இருந்தால், Eagle Inn Stay தங்கும் விடுதி விதி மீறி கட்டப்பட்டிருக்காது. மேலும், அரசாணை எண்.139 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் 10.05.2002ல் காஞ்சிபுரம் முழுமைத்திட்டத்தின்படி The Ancient Monuments and Archaeological Sites and Remains Act, 1958இல் அறிவிப்பில் தெரிவித்துள்ள வழிகாட்டுதல்களை கடைபிடிக்கவில்லையென தெளிவாக தெரிகிறது.

திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் கோவிலை சுற்றி விதி மீறல் கட்டிடங்கள் தொடர்பான வழக்கில் நடவடிக்கை எடுக்காமல் இருந்த திருச்சி மாநகராட்சி ஆணையரை மாண்புமிகு உயர்நீதி மன்றம் நேரடியாக கடுமையாக கண்டித்ததை தங்களுக்கு சுட்டிக் காட்டுவதோடு சம்ந்தப்பட்ட அனைத்து அரசு அதிகாரிகள் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் ஆகியோர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. இவ்வுத்திரவு காஞ்சிபுரம் மாநகராட்சிக்கும் பொருந்தும்.

ஏற்கனவே காஞ்சிபுரத்தில் விதி மீறி கட்டப்பட்ட ஸ்ரீராம் ரெசிடென்ஸி கட்டிடத்தின் மீது இம்முறை மன்றத்தில் புகார் அளித்து அதன் தொடர்பாக எனக்கு கொலை மிரட்டல் விடுத்தது குறித்து மனித உரிமையியல் ஆணையத்திடம் புகார் அளித்து 10941/22/36/2025 என எண்ணிட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது.

எனவே, சென்னை உயர்நீதி மன்றத்தின் வழிகாட்டுதலை பின்பற்றி சட்ட விரோதமாக கட்டப்பட்டுள்ள Eagle Inn Stay தங்கும் விடுதி (Lodge) மீது உரிய நடவடிக்கை எடுப்பதோடு, சம்பந்தப்பட்ட காஞ்சிபுரம் மாநகராட்சி அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.”.

7. முதலாம் எதிர்மனுதாரர் தரப்பில் காஞ்சிபுரம் மாநகராட்சி உதவிப் பொறியாளர்கள் (திட்டம்) 24.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

“காஞ்சிபுரம் நகரம் சர்வே வார்டு எண்.4, பிளாக் எண்.10, நகரளவு எண்.720, பழைய கதவு எண்.140/1, காமாட்சியம்மன் சன்னதி தெருவில் கட்டப்பட்டுள்ள கட்டிடம், காஞ்சிபுரம் மாநகராட்சி 18.04.2023 நாளிட்ட கட்டிட அனுமதி வணிக கட்டிடம் கட்ட ஸ்டில்ட் தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது கட்டிட உரிமையாளர் Eagle Inn Stay தங்கும் விடுதி (Lodge) அனுமதிக்கு மாறுதலாக, கூடுதலாக இரண்டு தளங்கள் மற்றும் கூடுதல் பரப்பளவில் தங்கும் விடுதி கட்டிடம் கட்டியுள்ளார்.

கட்டிடத்தின் மீது மேல் நடவடிக்கை தொடர தொடர்ச்சியாக நகரமைப்பு பிரிவில் அலுவலர் பணியிடம் காலியாக இருந்த நிலையில், தொடர் நடவடிக்கை எடுக்க இயலவில்லை. தற்போது மேற்கண்ட விதி மீறி கட்டப்பட்ட கட்டிடத்திற்கு மாறுதலாகவும் / கூடுதலாகவும் கட்டிடம் கட்டியிருப்பதால், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம் 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 135/1–ன் கீழ் 12.06.2025 நாளிட்டு அறிவிப்பு வழங்கப்பட்டு இறுதி அறிவிப்பு 08.10.2025 அன்று வழங்கப்பட்டது. ஆனால் அறிவிப்பின்படி மேற்கண்ட தங்கும் விடுதி நடவடிக்கை எடுக்காததால் 25.02.2026 அன்று குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும், இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.''.

8. இரண்டாம் எதிர்மனுதாரர் ஈகிள் இன்ஸ்டே தங்கும் விடுதியின் உரிமையாளர் 24.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''எனது Eagle Inn Stay தங்கும் விடுதி 2024 முதல் மேற்கண்ட முகவரியில் இயங்கி வருகிறது. மனுதாரர் தெரிவித்த தகவல் தவறானதாகும். மேற்கண்ட தங்கும் விடுதிக்கு காஞ்சிபுரம் மாநகராட்சியால் G+2 கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் நான்கு மற்றும் இரு சக்கர வாகனங்கள் நிறுத்த, தங்கும் விடுதி பக்கத்தில் இடவசதி ஏற்படுத்தி உள்ளேன். மேலும் இரண்டாவது மாடியின் மொட்டை மாடியில் சிறுவர்கள் விளையாடவும், விடுதியில் தங்குபவர்கள் உணவு அருந்தவும், கேரள ஓடு மூலம் தற்காலிக கூரை அமைத்துள்ளேன். மேலும் மாநகராட்சி அறிவுறுத்தலின்படி மாற்றி அமைக்க உள்ளேன்.

காஞ்சிபுரம் மாநகராட்சியால் வழங்கப்பட்ட தாக்கீதுகள் தொடர்பாக எங்கள் தங்கும் விடுதியில் மாற்றம் செய்ய உள்ளோம் என்ற விவரத்தை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''.

9. மனுதாரரின் முறையீட்டு மனு, எழுத்துபூர்வமான வாக்குமூலம், நேரடியாக அளித்த வாக்குமூலம், முதலாம் எதிர்மனுதாரரான காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கைகள், உதவிப் பொறியாளர்களின் (திட்டம்) வாக்குமூலம் மற்றும் இரண்டாம் எதிர்மனுதாரர் ஈகிள் இன்ஸ்டே தங்கும் விடுதியின் உரிமையாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்றத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

காஞ்சிபுரத்தில், 140/1 காமாட்சி அம்மன் சன்னதி தெருவில் உள்ள உலகளந்தார் பெருமாள் கோவில் காம்பவுன்ட் சுவர் ஒட்டி, காமாட்சி அம்மன் கோவில் 200 மீட்டர் தூரத்தில், முக்தேஸ்வரர் கோவில் 200 மீட்டர் தூரத்தில், வைகுண்ட பெருமாள் கோவில் 1/2 கிலோ மீட்டர் தூரத்தில், சுமார் 20 மீட்டர் உயரத்தில் 5 மாடி கட்டிடம் Eagle Inn Stay தங்கும் விடுதி (Lodge) Parking வசதி இல்லாமல், கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மேலும், 30.01.1997 நாளிட்ட அரசாணை மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் சுற்றறிக்கையின்படி, தமிழகத்தில் பழமையான கோவில்கள் கோபுரங்கள் உள்ள பகுதிகளில் 1 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் 9 மீட்டர் உயரத்திற்கு மேல் கட்டிடங்கள் கட்டக் கூடாது என்பதும், அரசாணை எண்.139 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் 10.05.2002ல் காஞ்சிபுரம் முழுமைத்திட்டத்தின்படி The Ancient Monuments and Archaeological Sites and Remains Act, 1958இல் தெரிவித்துள்ள வழிகாட்டுதல்களை கடைபிடிக்கவில்லை என்பதும், எனவே சட்ட விரோதமாக கட்டப்பட்டுள்ள Eagle Inn Stay தங்கும் விடுதி (Lodge) மீது உரிய நடவடிக்கை

எடுப்பதோடு, சம்பந்தப்பட்ட காஞ்சிபுரம் மாநகராட்சி அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மூலம், எழுத்துபூர்வ வாக்குமூலம் மற்றும் நேரடியான வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

காஞ்சிபுரம் நகரம் சர்வே வார்டு எண்.4, பிளாக் எண்.10, நகரளவு எண்.720, பழைய கதவு எண்.140/1, காமாட்சியம்மன் சன்னதி தெருவில் கட்டப்பட்டுள்ள கட்டிடம், காஞ்சிபுரம் மாநகராட்சியின் 18.04.2023 நாளிட்ட கட்டிட அனுமதி வணிக கட்டிடம் கட்ட ஸ்டில்ட் தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதும், கட்டிட உரிமையாளர் அனுமதிக்கு மாறுதலாக, கூடுதலாக இரண்டு தளங்கள் மற்றும் கூடுதல் பரப்பளவில் Eagle Inn Stay தங்கும் விடுதி கட்டிடம் கட்டியுள்ளார் என்பதும், மேற்கண்ட விதி மீறி கட்டப்பட்ட கட்டிடத்திற்கு மாறுதலாகவும் / கூடுதலாகவும் கட்டிடம் கட்டியிருப்பதால், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 135/1–ன் கீழ் 12.06.2025 நாளிட்டு அறிவிப்பு வழங்கப்பட்டும் இறுதி அறிவிப்பு 08.10.2025 அன்று வழங்கப்பட்டது என்பதும், ஆனால் அறிவிப்பின்படி மேற்கண்ட தங்கும் விடுதியின் உரிமையாளர் நடவடிக்கை எடுக்காததால் 25.02.2026 அன்று குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதும் முதலாம் எதிர்மனுதாரரான காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கைகள் மற்றும் உதவிப் பொறியாளர்கள் (திட்டம்)–ன் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

தனது Eagle Inn Stay தங்கும் விடுதி 2024 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருவதாகவும், விடுதிக்கு காஞ்சிபுரம் மாநகராட்சியால் G+2 கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதும், நான்கு மற்றும் இரு சக்கர வாகனங்கள் நிறுத்த தங்கும் விடுதி பக்கத்தில் இடவசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதும், இரண்டாவது மாடியின் மொட்டை மாடியில் சிறுவர்கள் விளையாடவும், விடுதியில் தங்குபவர்கள் உணவு அருந்தவும், கேரள ஓடு மூலம் தற்காலிக கூரை அமைக்கப்பட்டுள்ளது என்பதும், காஞ்சிபுரம் மாநகராட்சி அறிவுறுத்தலின்படியும் மற்றும் வழங்கப்பட்ட தாக்கீதுகள் தொடர்பாக தனது விடுதியில் மாற்றம் செய்ய உள்ளார் என்பதும் இரண்டாம் எதிர்மனுதாரராகிய ஈகிள் இன்ஸ்டே தங்கும் விடுதி உரிமையாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், காஞ்சிபுரம் நகரம் சர்வே வார்டு எண்.4, பிளாக் எண்.10, நகரளவு எண்.720, பழைய கதவு எண்.140/1, காமாட்சியம்மன் சன்னதி தெருவில் கட்டிட அனுமதிக்கு மாறாக கூடுதலாக இரண்டு தளங்கள் மற்றும் கூடுதல் பரப்பளவில் Eagle Inn Stay எனும் தங்கும் விடுதி (Lodge) கட்டியுள்ளதற்கு, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 135 (1)–ன் கீழ் அறிவிப்புகள் வழங்கப்பட்டும் அதன்படி மேற்கண்ட விடுதியின் உரிமையாளர் உரிய நடவடிக்கை எடுக்காததால், அவர் மீது காஞ்சிபுரம் முதன்மை உரிமையியல் நீதிமன்றத்தில் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, பிரிவு 135(1) (2) (6) r/w 180–ன்கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்து தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளர்களின் (திட்டம்) வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காண் சூழ்நிலையில், வழக்குகள் நிலுவையில் உள்ள இனங்கள் குறித்து 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10 (3) (b)–ல் நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரிக்கலாகாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது:–

The Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014, Section 10 (3) The Ombudsman shall not enquire into matters relating to,--

(a) xxx xxx
(b) any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquiries Act, 1952 or any matter pending before a Court;
(c) xxx xxx

எனவே, மனுதாரர் புகார் தொடர்பான பொருட்பாடு குறித்து காஞ்சிபுரம் முதன்மை உரிமையியல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு, தொடர் நடவடிக்கை நிலுவையில் உள்ளதால், மேற்குறிப்பிட்டுள்ள சட்டப்பிரிவின்படி மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் மேல் நடவடிக்கை எடுக்க இயலாது என முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு மே திங்கள் 07–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. S. அன்பழகன்,
155, அசோக்நகர், முசிறி மெயின் ரோடு,
துறையூர் (அஞ்சல் (ம) வட்டம்),
திருச்சிராப்பள்ளி மாவட்டம்–621 010.

(2) ஆணையர்,
காஞ்சிபுரம் மாநகராட்சி, காஞ்சிபுரம்.

(3) கட்டிட உரிமையாளர்,
"Eagle Inn Stay" தங்கும் விடுதி,
எண் 140/1 காமாட்சி அம்மன் கோவில் தெரு,
பூக்கடை சத்திரம், காஞ்சிபுரம்–631 502.

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

(5) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

நகல்:

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

12/5/26
செயலாளர்.